நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.07.08.2020

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07.08.2020ம் தேதி வெள்ளிகிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.வீ.குணசேகர்.B.E,
ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர்

1) இந்நகராட்சிப் ஆணையாளர் அவர்களின் ஜுலை 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண்.1103/2020/சி1)
**தீர்மான எண் : 181** பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஜுலை 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண்.1103/2020/சி1)
**தீர்மான எண் : 182** பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

3) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் உரகலவைக் கூடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிட பணிக்கு 15மீ அகலத்திற்கு இரும்பு கூரை அமைக்க கட்டிட வடிவமைப்பு (Sturctural Design) செய்ய வேண்டி உள்ளதால் அவசரம் அவசியம் கருதி 03.08.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| S.No | Description of Work | **M/s. SK ENGINEERING & CONSTRUCTION Bodinayakanur** | M/s. FULCRUM ENGINEERING CONSULTANCY Trichy | M/s. VEL CONSTRUCTION Bodinayakanur |
|---|---|---|---|---|
| | | **Rate per Sq.ft** | Rate per Sq.ft | Rate per Sq.ft |
| 1 | Construction of MCC with a capacity of 5tpd with compound wall at Bodinayakanur Municipality (Steel Truss) | 1.50 | 3.00 | 2.00 |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S S.K. Engineering & Construction என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:1673/2020/இ1)**
**தீர்மான எண் : 183** குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.

4) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதாலும் அதனால் பலத்த காற்று வீசி நகரின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. மேற்படி முறிந்து விழுந்த மரங்களை நகராட்சிக்கு சொந்தமான பில்டர் ஹவுஸ் கொண்டு செல்லவும் மரம் அறுத்து கொடுக்கவும் அதற்கு உரிய அறுவை இயந்திரம் பணியாட்கள் மற்றும் டிராக்டர் வாடகை சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,000/—ம் மேற்படி செலவினத்தை வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1881/2020/இ1**

**தீர்மான எண் : 184** அனுமதிக்கப்பட்டது.

5) போடிநாயக்கனூர் நகராட்சி நூற்றாண்டு நிறைவு திட்டப்பணிகளுக்கு திண்டுக்கல், அண்ணா பல்கலைகழக கல்லூரி மூலம் கட்டிட வடிவமைப்பு தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.2,19,480/—ஐ பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும், திட்டப்பணிக்கான மானியம் வரப்பெற்றவுடன் மதிப்பீடுகளில் இருந்து ஈடுசெய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்: 1226/2020/இ1)**

**தீர்மான எண் : 185** அனுமதிக்கப்பட்டது.

6)போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் தொடர்ந்து அதிகரித்துவரும் கொரோனாவை கட்டுப்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் ஆய்வு கூட்டத்தில் கூறிய அறிவுறையின்படி நகராட்சி கடைவீதிகளில் வாகன போக்குவரத்தை சரிசெய்யும் பொருட்டு நகராட்சி சாலை வழியாக செல்லும் சாலைகளில் இருபுறமும் இருசக்கர வாகனம் நிறுத்தவும் பேருந்து நிலையத்தில் நான்கு மற்றும் இருசக்கர வாகனம் தனித் தனியே பிரித்துக் காட்டவும் லைலான் கயிறு அடிக்கவும் வாகனம் நிறுத்தும் இடம் வர்ணம் பூசவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.65,000/—ம் மேற்படி செலவினத்தை வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1884/2020/இ1**

**தீர்மான எண் : 186** அனுமதிக்கப்பட்டது.

7)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கலப்பதற்கு தேவையான குளோரின் சிலிண்டர் ஓராண்டு உபயோகத்திற்கு வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2017/2020/இ1)**

**தீர்மான எண் : 187** அனுமதிக்கப்பட்டது.

8)போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் உள்ள சிறுபாலங்கள் சேதமடைந்து போக்குவரத்திற்கும் பொது மக்கள் கடந்து செல்ல இடையூராக உள்ளது. மேலும் மழைநீர் சீராக செல்ல இயலாத சூழ்நிலையிலும் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்த சிறு பாலங்கள் சரி செய்வதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2016/2020/இ1)**

**தீர்மான எண் : 188** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர்